மக்களுக்கான அரசாகச் செயல்படுகிறது!

‘திராவிட மாடல்’ அரசின் நீளும் சாதனைத் திட்டங்கள்!

‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, நவ. 6–

திராவிட மாடல் அரசின் சாதனை திட்டங்களின் பட்டியல் நீள்கிறது என ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டியுள்ளது.

இதுகுறித்து 5.11.2024 தேதிய ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கூறியிருப்பதாவது:–

இந்திய பொருளாதாரத்தில் தமிழகத்தின் 9 சதவீத பங்களிப்பு என்பது மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியை காட்டுகிறது. தேசத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) பங்களிப்பு செய்வதில் தமிழகம் 2ம் இடத்தை பிடித்துள்ளது. நாட்டின் வளர்ச்சி விகிதம் 7.24 சதவீதமாக இருக்கும் நிலையில் மாநிலத்தின் வளர்ச்சி விகிதம் 8.19 சதவீதமாக உள்ளது. தொழில் முதலீட்டுக்கு ஏற்ற சூழலை திமுக அரசு உருவாக்கி தந்ததாகவும், இதன் மூலம் நாட்டிலேயே 14வது இடத்தில் இருந்த தமிழகம் 3வது இடத்தை பிடித்துள்ளதாக நடுநிலையாளர்கள் பாராட்டி வருகின்றனர். பெண்கள், இளைஞர்கள், மாற்றுத்திறனாளிகள், விளிம்பு நிலையில் உள்ளவர்கள், ஒடுக்கப்பட்டோர் என அனைவரும் தங்களது வாழ்க்கை தரத்தை உயர்த்த அரசு எடுத்த நடவடிக்கைகளால் அவர்கள் பெண்கள் ரூ.1,000 பெறுகிறார்கள். பேருந்து பயண திட்டத்தின் கீழ் பெண்கள் 445 கோடி முறை அரசு பேருந்துகளில் இலவசமாக பயணம் செய்துள்ளனர். மக்களை தேடி மருத்துவம் திட்டம் மூலம் 1 கோடி பேர் பயனடைந்துள்ளனர்.

தினகரன்
நவம்பர் 5, 2024 செவ்வாய்க்கிழமை
நீளும் சாதனை திட்டங்கள்
இந்திய பொருளாதாரத்தில் தமிழகத்தின் 9 சதவீத பங்களிப்பு என்பது மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியை காட்டுகிறது. தேசத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) பங்களிப்பு செய்வதில் தமிழகம் 2ம் இடத்தை பிடித்துள்ளது. நாட்டின் வளர்ச்சி விகிதம் 7.24 சதவீதமாக இருக்கும் நிலையில் மாநிலத்தின் வளர்ச்சி விகிதம் 8.19 சதவீதமாக உள்ளது. தொழில் முதலீட்டுக்கு ஏற்ற சூழலை திமுக அரசு உருவாக்கி தந்ததாகவும், இதன் மூலம் நாட்டிலேயே 14வது இடத்தில் இருந்த தமிழகம் 3வது இடத்தை பிடித்துள்ளதாக நடுநிலையாளர்கள் பாராட்டி வருகின்றனர். பெண்கள், இளைஞர்கள், மாற்றுத்திறனாளிகள், விளிம்பு நிலையில் உள்ளவர்கள், ஒடுக்கப்பட்டோர் என அனைவரும் தங்களது வாழ்க்கை தரத்தை உயர்த்த அரசு எடுத்த நடவடிக்கைகளால் அவர்க

கல்வி துறையில் தமிழகம் 2வது இடத்துக்கு முன்னேறி உள்ளது. 16 லட்சம் மாணவர்கள் தமிழக முதல்வரின் காலை உணவு திட்டத்தில் பயன் பெற்றுள்ளனர். அரசு மற்றும் அரசு உதவி பெறும் 20,332 பள்ளிகளில் இணைய தள வசதி, ரூ.519.73 கோடியில் உயர் தொழில்நுட்பத்துடன் கூடிய ஆய்வகங்கள், 22,931 ஸ்மார்ட் வகுப்பறைகள், புதுமைப்பெண், நான் முதல்வன் திட்டங்களால் உயர்கல்வியில் சேரும் பெண்கள், மாணவர்கள் எண்ணிக்கை தொடர்ந்து உயர்வு என சாதனை திட்டங்களின் பட்டியல் நீள்கிறது.

அந்த வரிசையில் சென்னை கொளத்தூர் தொகுதியில் `முதல்வர் படைப்பகத்தை’ முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார். சென்னை கொளத்தூர் அகரம், ஜெகந்நாதன் சாலையில் புதிதாக கட்டப்பட்டுள்ள மாநகராட்சி பன்னோக்கு மையத்தில் வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் (சிஎம்டிஏ) சார்பில் முதல்வரின் சட்டசபை உறுப்பினர் மேம்பாட்டு நிதியை கொண்டு ‘முதல்வர் படைப்பகம்’ என்ற பெயரில் கோவொர்க்கிங் ஸ்பேஸ் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த படைப்பகத்தில் வருகின்றவர்களுக்கு படிப்பதற்கென்று ஒரு தளமும், பணியாற்றுவதற்கு என்று ஒரு தளமும், உணவு அருந்துவதற்கு ஒரு தளமும் என 3 தளங்கள் உள்ளன. ஒரே நேரத்தில் 51 பேர் படிக்கும் அளவுக்கு இடவசதி உள்ளது. அவர்களுக்கு தேவையான புத்தகங்களை கொண்ட ஒரு நூலகமும் அமைக்கப்பட உள்ளது. இதற்கு ரூ.5 மற்றும் ரூ.10 கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இலவசமாக அனுமதிக்கப்பட்டால் பொழுதுபோக்கு கூடமாக மாறிவிடக்கூடும் என்பதற்காக இந்த குறைந்தபட்ச கட்டணம் பெறப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பணி செய்வதற்காக கோஒர்க்கிங் ஸ்டேஷன் எனப்படும் ஒரு தளம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் 38 நபர்கள் ஒரே நேரத்தில் பணியாற்றலாம். மேலும், இதில் 3 கலந்தாய்வு கூடங்கள் அமைக்கப்படுகின்றன. கலந்தாய்வு கூடங்களில் இரண்டில் தலா 4 பேரும், ஒன்றில் 6 பேரும் அமர்ந்து பணியாற்ற முடியும்.

கோஒர்க்கிங் ஸ்பேஸ் பெரிய பெரிய நிறுவனங் களுக்கு வழங்கப்படாது என்றும், பொருளாதாரத்தில் சாதாரண நிலையில் இருக்கும் நிறுவனங்களுக்கு இந்த பணியிடத்தை பகிரவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கும் குறைந்தளவு கட்டணம் நிர்ணயிக்கப்பட உள்ளது. மேலும், பெண்கள் கணினி கற்பதற்காக, அனிதா பெயரில் கொளத்தூரில் தொடங்கப்பட்ட மையத்தில், 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்கள் பலன் அடைந்துள்ளனர். மக்களுக்கான திட்டங்களை தீட்டி, மக்களுக்கான அரசாக செயல்படுகிறது என்பதில் மாற்று கருத்துக்கு இடமில்லை.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொளத்தூரில் திறக்கப்பட்ட ‘முதல்வர் படைப்பகம்’ போல்

சி.எம்.டி.ஏ. சார்பில் ரூ.50 கோடியில் - பகிர்ந்த ‘பணியிட மையம்’ மற்றும் கல்வி மையப் பணிகள்!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆய்வு!

சென்னை, நவ.6-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கொளத்தூரில் திறக்கப்பட்டுள்ள “முதல்வர் படைப்பகம்”போல் வடசென்னை வளர்ச்சி திட்டத்தின்கீழ் சி.எம்.டி.ஏ சார்பில் ரூபாய் 50 கோடி செலவில் 10 நூலகங்களை மேம்படுத்தி, பகிர்ந்த பணியிட மையம் (Co working Space) மற்றும் கல்வி மையம் அமைப்பதற்கான பணிகள் விரைவில் துவக்கப்படும் என்றும் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேற்று (5.11.2024) திரு.வி.க. நகர் தொகுதி, எழும்பூர் தொகுதி, துறைமுகம் தொகுதி, ராயபுரம் தொகுதி, ஆர்.கே. நகர் தொகுதி மற்றும் பெரம்பூர் ஆகிய பகுதிகளிலும் அமைந்துள்ள முழு நேரம் மற்றும் பகுதி நேர கிளை நூலகங்களை வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் மேம்படுத்தி, பகிர்ந்த பணியிட மையம் (Coworking Space) மற்றும் கல்வி மையம் அமைப்பதற்காக களஆய்வினை மேற்கொண்டார்.

இந்து சமய அறநிலைத் துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது :-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய ஆலோசனைப்படி கடந்த மார்ச் மாதம் 14ஆம் தேதி சென்னை தங்க சாலையிலே தமிழக முதல்வர் அவர்களால் திட்டமிடப்பட்டு ரூபாய் 4,224 கோடி அளவில் பல்வேறு திட்ட பணிகளை துவக்குகின்ற ஒரு விழா வடசென்னையில் அனைவராலும் பாராட்டப்படுகின்ற அளவிற்கு மிக நேர்த்தியாக நடந்தது. அதனைத் தொடர்ந்து பல்வேறு திட்டங்களை இணைத்து ரூபாய் 4,000 கோடி இருந்த நிலையில் ரூபாய் 5,776 கோடி செலவில் 225 திட்டங்கள் சுமார் 11 துறைகளின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த திட்டங்களை குறித்து தொடர்ந்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், துணை முதலமைச்சர் அவர்களும் தொடர்ந்து ஆய்வு பணிகளை மேற்கொண்டு வருகின்றார்கள். இதில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் பங்களிப்பாக சுமார் ரூபாய் 1,613 கோடி இந்தத் திட்டப் பணிகளுக்காக ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவினை நிறைவேற்றி வருகின்றோம்.

இதில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் சார்பில் 28 பணிகள் எடுக்கப்பட்டு 25 பணிகள் இப்பொழுது நடைமுறையில் இருந்து கொண்டிருக்கிறது. இந்த திட்டத்திலும் அறிவிக்கப்படாத வடசென்னை வளர்ச்சி திட்டத்தில் கொளத்தூர் பகுதியில் நேற்றைக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் “முதல்வர் படைப்பகம்” என்ற உன்னதமான திட்டத்தை தொடங்கி வைத்தார்கள். வீட்டிலே படிக்கின்ற வசதி இல்லாத உயர்கல்வி படிப்பதற்காகவும், போட்டி தேர்வுகளில் பங்கேற்பதற்காகவும் முழுமையாக Wifi வசதியோடு மிகக் குறைந்த கட்டணத்தோடு, அதேபோல் பல்வேறு தேர்வுகளுக்கு படிக்கின்ற மாணவச் செல்வங்களுக்கு பொறியியல் படிப்பு என்றாலும் சரி அல்லது கலை மற்றும் அறிவியல் படிப்பு என்றாலும் சரி, வீட்டிலேயே படிக்கின்ற சூழல் சரிவர அமையப்பெறாத மாணவ செல்வங்களுக்கு அந்த இடங்களிலே படிப்பதற்கு இன்டர்நெட் வசதியோடு ஒரு பெரிய நூலகத்தையும் அமைத்து ஒரு முறை 51 பேர் உட்கார்ந்து படிக்கின்ற அளவிற்கும், 38 நபர்கள் பணி செய்வதற்குண்டான வசதிகளோடு நேற்றைக்கு முதல்வர் அவர்கள் கொளத்தூர் தொகுதி மக்களுக்கு முதல் திட்டமாக அந்த திட்டத்தை அர்ப்பணித்தார்கள்.

அதை தொடர்ந்து இந்த ஆண்டு சட்டமன்ற அறிவிப்பில் சென்னை பெருநகரத் திற்குட்பட்ட 10 இடங்களிலுள்ள நூலகங்களை மேம்படுத்துவதற்காக சுமார் ரூபாய் 20 கோடி செலவில், பகிர்ந்த பணியிட மையம் அமைப்பதற்கு ரூபாய் 30 கோடி செலவிற்கும் ஆக மொத்தம் 50 கோடி ரூபாயில் சுமார் 10 நூலகங்களுக்கு உண்டான அந்த இடங்களில் படிக்கின்ற அந்த நூலகத்தினுடைய தரத்தையும், பகிர்ந்த பணியிட மையம் மற்றும் கல்வி மையம் ஏற்படுத்தி தருகின்ற வகையில் திட்டமிடப்பட்டு, அந்தப் பணிகள் தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

கட்டமைப்பு வசதிகள்!

நேற்றைய தினம் முதலமைச்சர் அவர்கள் பங்கேற்ற நிகழ்ச்சிகளுக்கு பிறகு வடசென்னையில் குறிப்பாக நம்முடைய திரு.வி.க. நகர் தொகுதி, எழும்பூர் தொகுதி, துறைமுகம் தொகுதி, ராயபுரம் தொகுதி, ஆர்.கே. நகர் தொகுதி மற்றும் பெரம்பூர் ஆகிய பகுதிகளிலும் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கின்றார். அந்த வகையில் இன்றைக்கு சுமார் பல்வேறு இடங்களில் நூலகங்களை ஆய்வு செய்து, அந்த நூலகங்களுக்கு தேவையான அனைத்து கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி தரவும், 50 ஆண்டுகளுக்கு மேலாக பயன்படுத்துவதற்கு சற்று வசதி குறைவாக உள்ள நூலகங்களை இடித்துவிட்டு, புதிதாக நூலகங்களை கட்டுவதற்கு திட்டமிட்டு இன்று காலையிலே துறையினுடைய உறுப்பினர் செயலாளர் அன்சுல் மிஸ்ரா, பெருநகர மாநகராட்சி மேயர் அன்பிற்கினிய திருமதி.பிரியா, இந்த தொகுதியின் உடைய சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் தாயகம்கவி. அதேபோல் நூலக துறையைச் சார்ந்த அதிகாரிகளும், சென்னை பெருநகர வளர்ச்சி குழும துறையைச் சார்ந்த அதிகாரிகளும் இணைந்து இப்பொழுது இந்த பகுதியிலே ஆய்வினை மேற்கொண்டு இருக்கின்றோம்.

ஒரு தொகுதிக்கு ஒரு நூலகம்!

இதுபோன்று தொடர்ந்து இன்றைக்கு பல்வேறு நூலகங்களை ஆய்வு மேற்கொள்ள இருக்கின்றோம் உடனடியாக பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படுகின்ற நூலகங்கள் என்று ஒரு திட்டமிடலையும் புதிதாக கட்டடங்களைக் கட்டி மக்களுடைய பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு என்று இரண்டு வகைகளாக பிரித்து ஏற்கனவே இருக்கின்ற நூலகங்களை மேம்படுத்துவதற்கான பணியை பிப்ரவரி மாதத்திற்குள் முடிக்க வேண்டும் என்று புதிதாக கட்டுமானம் கட்டி திறக்க வேண்டிய இந்த பணிகளை திட்டமிட்டு ஒரு தொகுதிக்கு ஒரு நூலகம் என்று அனைத்து நூலகங்களையும் டிசம்பர் மாதம் 2025 ஆம் ஆண்டுக்குள் கட்டி முடிக்கப்பட வேண்டும் என்று திட்டமிடப்பட்டு ள்ளது.

குறிப்பாக வறுமைக் கோட்டிற்கு கீழே வசிக்கின்ற பகுதி மக்கள் படிக்கின்ற, பணி செய்கின்ற, வசதி இல்லாத பகுதிகளில் உள்ள இடங்களை தேர்வு செய்து, அந்த மக்களுடைய பொருளாதார முன்னேற்றத்திற்கும் அந்த பகுதியில் உள்ள மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கும் அதிக கவனம் செலுத்த தமிழக முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார், அந்த வகையிலே இன்று பல்வேறு நூலகங்களை ஆய்வு செய்ததின் அடிப்படையில் 2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திற்குள்ளாக முழுவதுமாக புதுப்பிக்கப்பட்டு, மக்கள் பயன்பாட்டிற்கு படிப்பதற்குண்டான வசதிகளோடு அர்ப்பணிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின்போது மேயர் திருமதி.ஆர்.பிரியா ராஜன், திரு.வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம்ஸ் மூர்த்தி, ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே. எபிநேசர், பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி. சேகர், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, மண்டல குழுத் தலைவர்கள் ஸ்ரீராமலு, நேதாஜி கணேசன், சிஎம்டிஏ தலைமைத் திட்ட அமைப்பாளர் எஸ். ருத்ரமூர்த்தி, மண்டல அலுவலர் திருமதி பரிதா பானு, கண்காணிப்புப் பொறியாளர்கள் ராஜமகேஷ்குமார், பாலமுருகன், மாவட்ட நூலக அலுவலர் திருமதி. கவிதா, செயற்பொறியாளர் ராஜன்பாபு, உள்ளாட்சிப் பிரதிநிதிகள் வி.சுதாகர், சொ.வேலு, ஜேசுபாதம் பாண்டியன், மாமன்ற உறுப்பினர்கள் சரவணன், திருமதி. கீதா சுரேஷ், திருமதி. தேவி கதிரேசன், திருமதி.ரேனுகா, ஜீவன், டில்லிபாபு மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

மதுரை யா.ஒத்தக்கடையில் தி.மு.க. சட்டத்துறை சார்பில் நடைபெற்ற தென் மண்டல ஆலோசனைக் கூட்டத்தில் சட்டத்துறை இணைச் செயலாளர் கே.எஸ்.ரவிச்சந்திரன் பேசினார். உடன் மண்டல பொறுப்பாளர்கள் ராதாகிருஷ்ணன், வழக்கறிஞர் கலாநிதி மற்றும் வழக்கறிஞர் அணி மாநில, மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தலைவர், துணைத் தலைவர் உள்ளிட்ட திரளானோர் பங்கேற்றனர்.

ஒடுக்கப்பட்ட சமூகத்தினரை குற்றப் பரம்பரையாகச் சித்தரிப்பதா?

கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா, எம்.பி. கண்டன அறிக்கை!

சென்னை, நவ. 6 -

கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. நேற்று விடுத்த அறிக்கை ஒன்றியல், “ஒடுக்கப்பட்ட சமூகத்தினரை குற்றப் பரம்பரையாகச் சித்தரிப்பதா?” என கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:–

‘பிராமண சமுகம் ஒடுக்கப்படுகிறது’ என்ற பெயரில் சென்னையில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டிருக்கிறது. ஊடகத்தின் கவனத்தை ஈர்க்க திராவிட இயக்கத் தலைவர்களை குறிப்பாக தந்தை பெரியார், முத்த மிழறிஞர் கலைஞர் உள்ளிட்டவர்களை அந்த ஆர்ப்பாட்டத்தில் இழிவுபடுத்திப் பேசியிருக்கிறார்கள். ‘பிராமணர்கள் பாதுகாப்பு வலியுறுத்தல்’என்ற போர்வையில் தி.மு.க. அரசுக்கு எதிராகக் களங்கத்தை உரு வாக்கத் திட்டமிட்டிருக்கி றார்கள்.

வெவ்வேறு வாழ்க்கை முறைகள்!

பண்பாட்டு அடிப்படையில் விந்திய மலைக்கு வடக்கே ஒரு வாழ்க்கை முறையும், விந்திய மலைக்கு தெற்கே ஒரு வாழ்க்கை முறையும் இருந்தது என்ற வரலாறு ஏன் இவர்களுக்குத் தெரியவில்லை? வானவியல், கணிதம், கட்டடக்கலை, சிற்பம், ஓவியம் போன்ற நுண்கலைகளில் பழந் தமிழர் சிறந்து விளங்கிக் கொண்டிருந்த காலத்தில், கி.மு. 3000 ஆம் ஆண்டில் மத்திய ஆசியாவிலிருந்து ஆரியர்கள் தங்கள் ஆடு, மாடுகளுக்கு மேய்ச்சல் இடம் தேடி கைபர் போலன் கணவாய் வழியே உள்ளே நுழைந்தனர். கொஞ்சக் காலத்தில் பிராமணர்கள் மதத் தலைமையைக் கைப்பற்றினார்கள்.

இவர்களின் மனுதர்மம் வடக்கே உள்ள வாழ்வியல் முறையை வகுத்துத் தந்தது. பிறப்பால் மக்கள் பிராமணர்கள், சத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் என்று பிரிக்கப்பட்டனர். கடவுளிடம் நேரடித் தொடர்பு கொண்டவர்கள் பிராமணர்கள் என்றும், அரசாளப் பிறந்தவர்கள் சத்திரியர்கள் என்றும், வணிகம் செய்யப் பிறந்தவர்கள் வைசியர்கள் என்றும் இந்த மூன்று தரப்பினருக்கும் சேவை செய்யப் பிறந்தவர்கள் சூத்திரர்கள் என்றும் மனுதர்மம் கூறுகிறது.

தீண்டாமைக் கொடுமைகள்!

அந்த மனுதர்மம் மூலம் பிராமணர்கள் மற்ற சமூகத்தினரை அடக்கி ஒடுக்கி கீழ்நிலைக்குத் தள்ளினார்கள். சூத்திரர்கள், உயர் சாதியினர் வாழும் பொதுத் தெருக்களில் நடக்க உரிமை மறுக்கப்பட்டது. கல்வி கற்கும் உரிமையும் பறிக்கப்பட்டது. கோயில்களின் உள்ளே சென்று வழிபடவும் உரிமை இல்லை. பொதுக் குளங்கள், கிணறுகளில் நீர் எடுக்கவும் உரிமை இல்லை என மனுதர்மம் பெயரில் தீண்டாமைக் கொடுமைகள் அரங்கேற்றப்பட்டன.

தமிழர்கள் சமத்துவ வாழ்வியல் முறையைக் கடைப்பிடித்தார்கள். வள்ளுவர் தனது குறளில், ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்’ என்று குறிப்பிடுகிறார். சங்க காலம் தொட்டு, ஏறத்தாழ பத்தாம் நூற்றாண்டு வரை தமிழர்கள் சமத்துவ வாழ்க்கை வாழ்ந்து வந்தனர். ஆண், பெண் சமத்துவம் தமிழர் வாழ்வில் மேலோங்கியிருந்தது. ஆனால், பிராமணர்கள் கடவுளின் பெயரால் மற்ற வர்களை உயர்ந்தவர்கள் என்று சொல்வதுதான் இன்றைய பிரச்னைக்கு காரணமாக விளங்கு கிறது.

சமூக பெருமையை நிலைநாட்டும் ஆர்ப்பாட்டம்!

‘மனிதராகப் பிறந்த அனைவரும் சமமானவர்களே’ என்ற அறிவியல் உண்மைக்கு மாறாக தம்மை உயர் சாதியினராகக் காட்டிக் கொள்ளக் குறிப்பிட்ட வகுப்பினர் இப்போதும் முயன்று கொண்டிருக்கிறார்கள் என்பதன் வெளிப்பாடுதான் அவர்கள் நடத்தியிருக்கும் ஆர்ப்பாட்டம்.

அது பாதுகாப்பு வலியுறுத்தல் ஆர்ப்பாட்டம் அல்ல. தன் சமூக பெருமையை நிலை நாட்ட நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம்.

பிரதமர் மோடி ஆட்சியில் ஒன்றிய அரசின் பல்வேறு துறைகளில் செயலாளராக இருப்பவர்களின் 90 விழுக்காட்டுக்கும் மேலானோர் பிராமணர்கள். மற்ற பிரிவினர்

இவர்களைக் காட்டிலும் தகுதி பெற்றவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு முக்கியத் துறைகளை நிர்வகிக்கும்

வாய்ப்பு வழங்கப்படுவதில்லை. அதுபோலவே, நீதியரசர்களில் மிகப் பெரும்பான்மையினர் உயர் ஜாதியினராக உள்ள நிலை பல பத்தாண்டுகளாகத் தொடர்ந்து வருவதை உயர் பொறுப்பில் உள்ளோரே சுட்டிக்காட்டும் நிலை உள்ளது..

தமிழ்நாடு அரசுப் பணிகளில் இட ஒதுக்கீட்டு முறையை சட்டப்படி நடைமுறைப்படுத்தி மனிதர்கள் யாராயினும் அவர்களுக்கு பாரபட்சம் காட்டாமல், கல்வித் தகுதிக்கு ஏற்ப பதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. தென்னகத்தில், குறிப்பாகத் தமிழ்நாட்டில் பிராமணர்கள் தங்களை உயர் சாதியினராகவும், மற்றவர்கள் தங்களைவிடத் தாழ்ந்தவர்களாகவும் எண்ணிச் செயல்படுவதை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்?

கலைஞரின் முழக்கம்!

இந்து மதத்தில் ஏறத்தாழ 90 சதவிகித மக்கள் பிற்படுத்தப்பட்ட வர்களாக பட்டியலினத் தவராகப் புறக்கணிக்கப்பட்ட நிலையில், 1916ஆம் ஆண்டு தொடங்கிய நீதிக்கட்சி, திமுக போன்ற திராவிட இயக்கங்கள் இந்த 90 சதவிகித மக்களின் சுயமரியாதைக்காகப் போராட்டம் நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. திராவிட இயக்கம், தென்னிந்திய நல உரிமைச் சங்கம், நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கம், தந்தை பெரியார் முன்னெடுத்து நடத்திய போராட்டங்களாலும் வேள்விகளாலும்தான் இன்றைக்கு ஒடுக்கப்பட்டவர்கள் முன்னேறி வந்து கொண்டிருக்கிறார்கள். அதனால்தான், ”பாராட்டிப் போற்றி வந்த பழமை லோகம். ஈரோட்டுப் பூகம்பத்தால் இடியுது பார்” என முழக்கமிட்டார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

ஒடுக்கப்பட்டவர்கள் உயர்வுக்கு வருவதைப் பொறுத்துக் கொள்ள முடியாமல்தான் அவர்கள் மீது இன்றைக்கும் களங்கத்தை வீசுகிறார்கள். “பிராமணர் அல்லாதார் பதவிகளுக்கு வந்தால் லஞ்சம் வாங்குவார்கள்” எனச் சொல்லி ஒடுக்கப்பட்ட சமூகத்தினரை மிக மோசமாக இழிவுபடுத்தியிருக்கிறார் முன்னாள் நடிகை கஸ்தூரி. டிவி விவாத நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசிய நடிகை கஸ்தூரி, ‘திறமை அடிப்படையில் பிராமணர் அல்லாதார் பதவிகளுக்கு வந்ததால் லஞ்சம் வாங்குகின்றனர்’ என்று பேசி பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பட்டியல் சமூகத்தினர் என ஒடுக்கப்பட்ட சமூகத்தினர் அனைவரையும் மிக மோசமானவர்களாகச் சித்தரிக்க முயன்றிருக்கிறார். பிராமணர் சமூகம் உயர்வானது என நிலை நிறுத்த, ஒடுக்கப்பட்ட சமூகத்தினரைக் ’குற்றப்பரம்பரை’ என வர்ணம் அடித்திருக்கிறார்.

ஊடக வெளிச்சம்!

“தெலுங்கர்கள் அந்தப்புரத்துச் சேவகர்கள்” எனச் சர்ச்சை கருத்தைச் சொல்லிவிட்டு, ”அப்படி சொல்லவில்லை” என வியாக்கியானம் பேசுகிறார். சினிமாவில் மார்க்கெட் போன பிறகு தன்னை நிலைநிறுத்திக் கொள்ள... ஊடக வெளிச்சம் தன் மீது விழ... அதன் மூலம் அரசியல் அங்கீகாரம் பெற... பிற சமுதாயத்துக்குப் பெண்களையும் அதிகாரிகளையும் கேவலமாகச் சித்தரிப்பதை அனுமதிக்கவே முடியாது. இது இன்னொரு ஆரிய ஆதிக்க உணர்வின் வெளிப்பாடு. அதனைத் திராவிட மாடல் அரசு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்காது. ஆரியத்தை எப்போது தலைதூக்க விட மாட்டோம்.

தெலுங்கர்களை மட்டுமல்ல.. பெண்களையே கஸ்தூரி கேவலப்படுத்தியிருக்கிறார். ’அந்தப்புரத்து சேவகர்கள்’ என்று ஒரு பெண்ணே பெண் இனத்தையே கேவலமாகச் சித்தரிப்பவர்களுக்கு மற்ற இனத்தைப் பற்றி என்ன கவலை இருக்கப் போகிறது? இந்து கோயில்களுக்குப் பெண்களை நேர்ந்து விடுவதைச் சட்டத்துக்குப் புறம்பானதாக அறிவித்து, தேவதாசி ஒழிப்புச் சட்டத்தைச் சென்னை மாகாண சட்டமன்றத்தில் 1947ல் நிறைவேற்றி தேவதாசிகளுக்குத் திருமணம் செய்யும் உரிமையைப் பெற்றுத் தந்த மண் தமிழ் நாடு. இங்கே ஆரியம் வெற்றி பெறாது.

‘பட்டியலின மக்களுக்கு இருப்பதுபோல, பிராமணர்களைப் பாதுகாக்கச் சிறப்புச் சட்டம் இயற்ற வேண்டும்’ என அந்த ஆர்ப்பாட்டத்தில் முழங்கியிருக்கிறார்கள். பட்டியலினத்தவரை மிகவும் கீழ் சாதியினராக நினைப்பவர்கள், அவர்களுக்கு இருப்பது போலவே சிறப்புச் சட்டம் வேண்டும் என்பதைக் கேட்டு சிரிக்கத்தான் தோன்றுகிறது. எல்லா சமூகத்தினரைப் போலவே பிராமண சமுகமும் எந்த பிரச்னையும் இல்லாமல் இங்கே வாழ்ந்து வருகிறார்கள். ஆனால், அவர்களுக்கு ஏதோ நாளும் அநீதி இழைக்கப்படுவதாகவும், அவர்கள் மீது வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டு ஒடுக்கப்படுவதாகவும்கூறி பொய்யான தோற்றத்தைக் கட்டமைக்க ஆர்ப்பாட்டத்தை நடத்தியிருக்கிறார்கள்.

அனைத்து உயர் அதிகாரிகள்!

அரசுத் துறை உயர் பதவிகள் என்றாலும் தனியார்த் துறை பணிகள் என்றாலும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளாக இருந்தாலும் அனைத்து உயர் அதிகாரங்களையும் அனுபவித்துக் கொண்டு, தங்களுக்கு பாதுகாப்பு இல்லை, ஒதுக்கி வைக்க முயற்சி நடக்கிறது என்றெல்லாம் கூப்பாடு போடுவது, பட்டியல் சமூக மக்களுக்கான சிறப்புச் சட்டங்களைக் கேலி செய்யும் முயற்சி.

அனைத்து சமுகத்தினரும் பாதுகாப்பாக வாழ்வதற்கோ, விரும்பிய தொழிலை நிம்மதி யாக செய்வதற்கோ எந்தவொரு தடையும் தமிழ்நாட்டில் இல்லை என்பது நாடறிந்தது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான ஆட்சி அனைத்து சமூகத்தினரையும் அரவணைத்துச் செல்கிறது. சாதி மோதல்களோ மதக் கலவரமோ இல்லாமல், ‘எல்லோருக்கும் எல்லாம்’ என்ற கொள்கையைக் கடைப்பிடித்துச் செல்கிறது. சமாதான சகவாழ்வு, சமத்துவ நல்லிணக்கம் என்ற அடிப்படையில் இயங்கி வருகிறது. சகோதரத்துவத்துடன் வாழ்ந்து வரும் தமிழ் மண்ணில் சமூக அமைதியைக் குலைக்க, ஆர்ப்பாட்டம் என்ற பெயரில் அவதூறு பிரசாரத்தை மேற்கொண்டு பீதியைக் கிளப்புவது உள் நோக்கம் கொண்டது.

பிராமண சமூகத்தினருக்கு எதிராக எந்த சிறு வன்முறையும் தமிழ்நாட்டில் கடந்த நான்காண்டுகளில் நடைபெறவில்லை. ஒடுக்கப்பட்ட மக்களின் பாதுகாப்புக்கான சட்டத்தை நீர்த்துப் போக வைப்பதற்காகவோ அல்லது தங்கள் சமூகம் மோசமாகப் பாதிக்கப்படுவது போல ஒரு தோற்றத்தை உருவாக்கவோ திட்டமிடுகி றார்கள் என்பது அப்பட்டமாகவே வெளிப்பட்டிருக்கிறது.

கழகத்தின் ஐம்பெரும் முழக்கங்கள்!

திமுகவின் ஐம்பெரும் முழக்கங்களிலேயே ஆதிக்கமற்ற சமுதாயத்தை அமைத்தே தீருவோம்; வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம் என்றிருக்கிறது; அ